## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி

## திருவாய்மொழி தனியன்கள்

### நாதமுனிகள் அருளிச் செய்தது

ப$_4$க்தாம்ருதம் விஷ்வஜநாநுமோத$_3$நம்
ஸர்வார்த்த$_2$த$_3$ம் ஸ்ரீஷட$_2$கோபவாங்க்மயம் |
ஸஹஸ்ரஷாகே$_2$ாபநிஷத்ஸமாக$_3$மம்
நமாம்யஹம் த்$_3$ராவிட$_3$வேத$_3$ஸாக$_3$ரம் ||

### ஈச்வரமுனிகள் அருளிச் செய்தது

திருவழுதி நாடென்றும் தென்குருகூர் என்றும்
மருவினிய வண்பொருநல் என்றும் - அருமறைகள்
அந்தாதி செய்தான் அடி இணையே எப்பொழுதும்
சிந்தியாய் நெஞ்சே தெளிந்து

### சொட்டை நம்பிகள் அருளிச் செய்தது

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணும்
இனத்தாரை அல்லாது இறைஞ்சேன் - தனத்தாலும்
ஏதும் குறைவிலேன் எந்தை சடகோபன்
பாதங்கள் யாமுடைய பற்று

### அனந்தாழ்வான் அருளிச் செய்தது

ஏய்ந்த பெரும் கீர்த்தி இராமானுச முனி தன்
வாய்ந்த மலர்ப் பாதம் வணங்குகின்றேன் - ஆய்ந்த பெரும்
சீரார் சடகோபன் செந்தமிழ் வேதம் தரிக்கும்
பேராத உள்ளம் பெற

### பட்டர் அருளிச் செய்தவை

வான் திகழும் சோலை மதிள் அரங்கர் வண்புகழ் மேல்
ஆன்ற தமிழ் மறைகள் ஆயிரமும் - ஈன்ற
முதல் தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த
இதத் தாய் இராமானுசன்

மிக்க இறை நிலையும் மெய்யாம் உயிர் நிலையும்
தக்க நெறியும் தடையாகித் - தொக்கியலும்
ஊழ் வினையும் வாழ் வினையும் ஓதும் குருகையர் கோன்

யாழின் இசை வேதத்தியல்

### நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 1-1 - உயர்வற உயர்நலம்[1]
### (எம்பெருமான் திருவடிகளிலே நித்ய கைங்கர்யம் பண்ணும்படி ஆழ்வார் தம் திருவுள்ளத்துக்கு உபதேசித்தல்)

2675 * உயர்வற உயர் நலம் * உடையவன் யவன்[2] அவன் *
மயர்வற மதி நலம் * அருளினன் யவன்[3] அவன் **
அயர்வறும் அமரர்கள் * அதிபதி யவன்[4] அவன் *
துயர் அறு சுடர் அடி * தொழுதெழு என் மனனே! 1

2676 மனன் அகம் மலம் அற * மலர் மிசை எழு தரும் *
மனன் உணர்வு அளவிலன் * பொறி உணர்வு அவை இலன் **
இனன் உணர் முழு நலம் * எதிர் நிகழ் கழிவினும் *
இனன் இலன் எனன் உயிர் * மிகு நரை இலனே 2

2677 இலனது உடையனிது * என னினைவு அரியவன் *
நிலனிடை விசும்பிடை * உருவினன் அருவினன் **
புலனொடு புலனலன் * ஒழிவிலன் பரந்த * அந்
நலனுடை ஒருவனை * நணுகினம் நாமே 3

2678 நாம் அவன் இவன் உவன் * அவள் இவள் உவள் எவள் *
தாம் அவர் இவர் உவர் * அது இது உது எது **
வீம் அவை இவை உவை * அவை நலம் தீங்கவை *
ஆமவை ஆயவை ஆய் * நின்ற அவரே 4

2679 அவரவர் தமதமது * அறிவறி வகை வகை *
அவரவர் இறையவர் * என அடி அடைவர்கள் **
அவரவர் இறையவர் * குறைவிலர் இறையவர் *
அவரர்வர் விதி வழி * அடைய நின்றனரே 5

2680 நின்றனர் இருந்தனர் * கிடந்தனர் திரிந்தனர் *
நின்றிலர் இருந்திலர் * கிடந்திலர் திரிந்திலர் **
என்றும் ஒர் இயல்வினர் * என நினைவு அரியவர் *
என்றும் ஒர் இயல்வொடு * நின்ற எம் திடரே 6

---

[1] இது கோவில் திருவாய்மொழி
[2] எவன்
[3] எவன்
[4] எவன்

2681 திட விசும்பு எரி வளி * நீர் நிலம் இவை மிசை *
படர் பொருள் முழுவதுமாய் * அவை அவை தொறும் **
உடல் மிசை உயிர் எனக் * கரந்தெங்கும் பரந்துளன் *
சுடர் மிகு சுருதியுள் * இவை உண்ட சுரனே 7

2682 சுரர் அறிவரு நிலை * விண் முதல் முழுவதும் *
வரன் முதலாய் அவை * முழுதுண்ட பர பரன் **
புரம் ஒரு மூன்றெரித்து * அமரர்க்கும் அறிவு இயந்து *
அரன் அயன் என * உலகழித்து அமைத்துளனே 8

2683 உளன் எனில் உளன் * அவன் உருவம் இவ்வுருவுகள் *
உளன் அலன் எனில் * அவன் அருவம் இவ்வருவுகள் **
உளன் என இலன் என * இவை குணம் உடைமையில் *
உளனிரு தகைமையொடு * ஒழிவிலன் பரந்தே 9

2684 பரந்த தண் பரவையுள் * நீர் தொறும் பரந்துளன் *
பரந்த அண்டம் இதென * நில விசும்பு ஒழிவற **
கரந்த சில் இடம் தொறும் * இடம் திகழ் பொருள் தொறும் *
கரந்தெங்கும் பரந்துளன் * இவை உண்ட கரனே 10

2685 * கர விசும்பு எரி வளி * நீர் நிலம் இவை மிசை *
வரன் நவில் திறல் வலி * அளி பொறையாய் நின்ற **
பரன் அடி மேல் * குருகூர்ச் சடகோபன் சொல் *
நிரல் நிறை ஆயிரத்து * இவை பத்தும் வீடே 11

**அடிவரவு:** உயர் மனன் இலனது நாம் அவரவர் நின்றனர் திடவிசும் சுரரறி
உளனெனில் பரந்த கரவிசும் வீடு